<u>**நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி**</u>
<u>**நகர்மன்ற சாதாரண கூட்டம்**</u>

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23.06.2026 நாள் அன்று செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரண கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நாள்: 23.06.2026

**நகர் மன்ற தலைவர் (பொறுப்பு)**
**நந்திவரம்–கூடுவாஞ்சேரி**
**நகராட்சி.**

---

**பொருள் எண்.1**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகம் புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு மாற்றம் செயப்பட்டதை தொடர்ந்து பழைய நகராட்சி அலுவலக கட்டிடம் சமுதாய கூடமாக புணரமைக்கப்பட்டு பயன்படுத்தவும் மற்றும் பழுதடைந்து இடிக்கப்பட்ட பழைய மீன் மார்கெட் பகுதியை புதிய வணிக வளாக மைய கட்டிடம் அமைக்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**தீர்மானம் எண்.28 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.2**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி பகுதிகளில் தற்போது திருத்தியமைக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2026ன் கூறுகளான மூலத்திலேயே குப்பைகளை நான்கு வகையாக பிரித்தல், மொத்த குப்பை உருவாக்குபவர்களுக்கான வழிகாட்டுதல்கள், பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் மேற்படி விதிகளை மீறுவோர் மீதான குற்ற நடவடிக்கை மற்றும் அபராதம் விதித்தல் போன்றவை குறித்த உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்கள் குறித்த பல்வேறு விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்திட விளம்பர பதாகைகள் அமைத்தல், துண்டு பிரசுரங்கள் அடித்தல், அபராத புத்தகங்கள், ஆட்டோ விளம்பரங்கள், வீதி நாடகங்கள் பள்ளிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், போட்டிகள் நடத்துதல், விழிப்புணர்வு பேரணிகள் நடத்துதல், குப்பை கொட்டுதல் இல்லாத பகுதி என பேனர்கள் நிறுவுதல், Waste to Art போட்டிகள் நடத்துதல், கூட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்கிட அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.5.00/- இலட்சத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 978/2026/H1

**தீர்மானம் எண்.29– மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பணிகளை Green Agro Environment Services நிறுவனம் 01.06.2023 முதல் 30.06.2026 வரை மேற்கொண்டு வரும் நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் கடிதம் e-file No.DMA/1190/2026 நாள்.02.06.2026ல் மேற்கண்ட பணியினை மேற்கொண்டுவரும் நிறுவனங்களுக்கு 01.07.2026 முதல் 31.08.2026 வரை காலநீட்டிப்பு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள மேற்படி காலத்திற்கு Green Agro Environment Services நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.198/2022/எச்1

**தீர்மானம் எண்.30 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.4**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 11–ல் உள்ள நந்திவரம் காலனி நந்தீஸ்வரர் சிவன் கோயில் அருகில் (2000 LPH) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் (RO PLANT) அமைத்தல் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.7.50 இலட்சத்தில் குடிநீர் நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.31– மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.5**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22ல் உள்ள நெல்லிக்குப்பம் சாலை மற்றும் வார்டு எண். 10 பழைய பேரூராட்சி அலுவலகம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள முதலமைச்சர் காலை உணவு திட்டம் மையங்களுக்கு Ro Plant With Cold Water Dispenser- 2 எண்ணிக்கையில் அமைத்தல் பணிக்கான செலவின தொகை ரூ.6.80/– இலட்சத்தில் குடிநீர் நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.32– மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.6**

அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் திட்ட பணிகளின் கீழ் கட்டப்பட்டு வரும் வருமானம் தரகூடிய இனங்களுக்கு முன்னதாகவே பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி, குத்தகைக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டது.

இந்நகராட்சியில் வார்டு எண்.21 நெல்லிகுப்பம் சாலை, சர்வே எண்.603/1 K.N.M.T திட்டத்தின் கீழ் கட்டப்படும் புதிய மீன் மார்க்கெட் 37 எண்ணிக்கை கடைகளுக்கு முன் குத்தகை வழங்க நகராட்சி பொறியாளர் கடை ஒன்றுக்கு ரூ. 2077/– மாத வாடகை என நிர்ணயம் செய்து வழங்கியுள்ளார்.

மேலும், மேற்படி குத்தகை இனத்திற்கு, மார்க்கெட் மதிப்பு கணக்கீடு செய்ய வருவாய் ஆய்வர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு சதுர அடி ஒன்றுக்கு

ரூ. 35/– என மார்க்கெட் மதிப்பு கணக்கீடு செய்யப்பட்டு, அதன்படி ஒரு கடைக்கு ரூ. 2240/– என வாடகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, உயர்ந்தபட்ச வாடகையாக மார்க்கெட் மதிப்பு ரூ.2240/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளை கணக்கில் கொண்டு கடை வாடகை அரசாங்க மதிப்பு ரூ. 2240/– என நிர்ணயம் செய்யலாம்.

மேலும், புதிய மீன் மார்க்கெட்டுக்கான ஏல முன் வைப்புத் தொகை ரூ.30,000 என நிர்ணயம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், கட்டிட பணிகள் முழுமையாக முடிவுற்று பொறியியல் துறையினரால் ஒப்படைப்பு செய்யப்பட்ட பின்னர் குத்தகைதாரர்க்கு ஒப்படைப்பு செய்யவும், மேலும் மேற்படி ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு ஒரு வருட வாடகை தொகையினை முன் வைப்புதொகையாக பெறவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் உரிமத்திற்கான மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும்,மேற்படி குத்தகை பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோருவதை நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் தோராய செலவு ரூ1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மானம் எண்.33– பழைய ஒப்பந்ததார ர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஏலம் விட மன்ற அனுமதி அளிக்கிறது**

**நகர்மன்ற தலைவர் (பொறுப்பு)**
**நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி**